අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## புள்ளியிடும் திட்டம்



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 22 | T | I |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

## தமிழ் மொழியும் இலக்கியமும் - I

## பகுதி I - விடைகள்

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| **01.** | 4 | **11.** | 3 | **21.** | 2 | **31.** | 3 |
| **02.** | 3 | **12.** | 1 | **22.** | 1 | **32.** | 3 |
| **03.** | 1 | **13.** | 4 | **23.** | 4 | **33.** | 2 |
| **04.** | 2 | **14.** | 2 | **24.** | 3 | **34.** | 4 |
| **05.** | 1 | **15.** | 2 | **25.** | 2 | **35.** | 1 |
| **06.** | 4 | **16.** | 3 | **26.** | 1 | **36.** | 3 |
| **07.** | 2 | **17.** | 4 | **27.** | 4 | **37.** | 1 |
| **08.** | 3 | **18.** | 4 | **28.** | 1 | **38.** | 4 |
| **09.** | 1 | **19.** | 1 | **29.** | 3 | **39.** | 2 |
| **10.** | 4 | **20.** | 2 | **30.** | 2 | **40.** | 3 |

**(01 x 40 = 40 புள்ளிகள்)**

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 22 | T | II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் - II**

**பகுதி II - விடைகள்**

*1.*

(i) முழங்கு + நிரை + புனல் + அருவி + கழங்கு + என + முத்து + ஆடும்.

(ii) "கொஞ்சம் வரிசையில அப்பிடியே இருங்கோ. ஏன் ஐயா இடையில எழும்புறீங்கள்?"

(iii) மரங்கள் உன்னால் வெட்டப்பட்டன /
உன்னால் மரங்கள் வெட்டப்பட்டன.

(iv) இன்றைக்கென்னவோ செவத்தாள் பால் கறக்க விட்டது.

(v) எழுவாய் – தீ / சுதந்திரத்தீ
பயனிலை - எரிந்தது

(vi) பெயர் - தாயின் மடிக்குள் குழந்தை உறங்கியது.
வினை - கண்மணி ஆடைகளை மடித்தாள்.
(இவை போன்ற பொருத்தமான வாக்கியங்கள்)

(vii) அன்றி

(viii) முழங்குகின்ற

(ix) தலைமைத்தொடர் : நீ பரீட்சையில் சித்தி பெறுவாய்
சார்புத்தொடர் (எச்சத்தொடர்) : நீ கவனமாகப் படித்தால்

(x) மாணவர்கள் கடினமான போக்குடைய மொழியின் இலக்கணத்தை உணரார்கள்.

**(02 x 10 = 20 புள்ளிகள்)**

*2.*

(அ) தலைப்பு –
இலங்கையும் சுற்றலாத்துறையும்
இலங்கையும் சுற்றுலாப் பயணியும்

- வளர்ந்து வரும் துறைகளில் சுற்றலாத் துறையுமொன்றாகும்.
- இது ஒரு சேவைத் துறையாகும்.
- இயற்கைக் காட்சி மற்றும் வனப்பினையும் அடிப்படையாகக் கொண்டு இத்துறை வளர்ந்து வருகிறது.
- இதனால் பல நன்மைகள் கிடைக்கப் பெறுகின்ற போதும் அதை மேம்படுத்த வேண்டியும் உள்ளது.
- வெவ்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.
- ஒரு தசாப்தமாக இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருந்தது.
- கொரோனாத் தொற்றின் காரணமாகச் சுற்றுலாத்துறை வீழ்ச்சி கண்டது.

- உள்நாட்டு அரசியல், பொருளாதாரக் கொள்கைகளாலும் சற்றுலாத் துறையில் சரிவுகள் ஏற்பட்டன.
- இலங்கையின் இயற்கைச் சூழலே சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்தது.
- அழகிய கடற்கரைகள், நெஞ்சேற்றமான மலைகள், ஆறுகள் மற்றும் துங்கித்த, டெவோன், சென்கிளயர் போன்ற நீர்வீழ்ச்சிகள் காணப்படுகின்றமை.
- குட்டி நியூசிலாந்து என வர்ணிக்கப்படும் நுவரெலியா.
- அனுராதபுரம், கண்டி, பொலநறுவை போன்ற இடங்களிலுள்ள புராதன சிதைவடைந்த கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள்.
- வெவ்வேறு பிரதேசங்களின் காலநிலைகள், தேயிலை, றப்பர் தோட்டங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்தவை.
- வில்பத்து, குமண, எல்ல, கல்லோயா போன்ற வனவிலங்குப் புகலரண்கள், சிகிரியா போன்றவையும் சுற்றுலாப் பயணிகளால் விரும்பப்படுகின்றன.
- சுற்றலாப் பயணிகளால் இலங்கை அந்நியச் செலாவணியை ஈட்டுகின்றமை.
- பிரயாண முகவர்கள், விமான சேவை, போக்குவரத்துச் செயற்பாடுகள் போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்கள் சுற்றுலாப் பயணிகளால் வருமானம் பெறுகின்றதோடு வேலை வாய்ப்பையும் பெற்றுள்ளனர்.
- சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டும், சுற்றுலா மையங்களை அமைக்க வேண்டும்.
- பயணிகளுக்கான பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- நவீன போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.
- உள்நாட்டு உல்லாசப் பயணிகளை ஊக்கப்படுத்தும் செயற்றிட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.
- உள்ளூர் உற்பத்திகளை நவீன மெருகுடன் உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவர முடியும் சுற்றுலாத் துறையையும் வளர்க்க முடியும்.

(ஆ) தலைப்பு –

வீதி விபத்துக்களும் அதற்கான காரணங்களும்

- வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.
  - வீதிகளின் அமைப்பும் விஸ்தீரணமும்
  - மதுபோதைச் சாரதியம்
  - வீதிச் சமிக்ஞைகளைப் பின்பற்றாமை
  - வாகனங்களைச் செலுத்தும்போது செல்லிடப்பேசி பயன்படுத்தல்
  - பாதசாரிகள் வீதி விதிகளைப் பின்பற்றாமை
  - அவதானமின்றிய வாகனச் செலுத்துகை
  - போட்டி மனப்பான்மையில் வாகனங்களை ஓட்டுதல்
  - சாரதிகளுக்குப் போதிய ஓய்வின்மையும், உறக்கமின்மையும்
  - கட்டாக்காலிகளை வீதியில் விடுதல்
  - வாகனங்களின் தரம்
- வீதி விபத்துக்களால் ஏற்படும் பாதக நிலைமைகள்
  - உயிரிழப்பு ஏற்படல்
  - அங்கவீனமடையும் நிலை ஏற்படல்
  - சொத்திழப்பு ஏற்படல்
  - குடும்பங்கள் தம் உறுப்பினர்களையிழந்து வறுமைக்குள் தள்ளப்படல்
  - பிள்ளைகள் பொருளாததார நலிவால் பாதிக்கப்படல்
  - கற்றல் இடை விலகல் ஏற்படல்
  - சிறுவர் தொழிலாளர் அதிகரிக்கும் நிலை தோன்றலாம்

- கட்டுப்படுத்தும் வழிகள்
    - வாகனங்களைத் தரச் சோதனைக்கு உட்படுத்துதல்
    - வீதி விதிகளைப் பின்பற்றல்
    - வீதி விதிகள் பற்றிய விளிப்புணர்வை ஏற்படுத்தல்
    - சாரதிகளை மதுசாரம் மற்றும் கண் பரிசோதனைகளுக்கு உட்படுத்தல்
    - வேகக் கட்டுப்பாட்டைக் கணிக்கும், கண்காணிக்கும் கருவிகள் கமராக்களைப் பொருத்துதல்
    - ஒற்றை வழிப் பயணப் பாதைகளை ஏற்படுத்தல்
    - நகரங்களை அண்மித்த நுழைவுப் பாதைகளை ஒருவழிக்குரியதாக அமைத்தல்
    - சனநெரிசலான இடங்களில் உட்செல்லும் வாகனங்களை வகைப்படுத்திக்கொள்ளல்
    - போக்குவரத்துப் பொலிசாரின் கண்காணிப்புக்களை அதிகரித்தல்

(இ)

- உரையாடலுக்குரிய அமைப்பைப் பின்பற்ற வேண்டும்.
- சிறுசிறு வாக்கியங்களில் விடயத்தைத் தொடர்புபடுத்த வேண்டும்.
- பிரதான விடயத்துடன் உரையாடலைத் தொடர்புபடுத்த வேண்டும்.
- நன்மைகள் பற்றியும், தீமைகள் பற்றியும் விவாதித்து நிறுவும் பாங்கில் உரையாடலை அமைக்க வேண்டும்.
- ஒருவரது கூற்றை மற்றவர் ஒத்துப்போவதைப் போல் ஆரம்பம் முதல் உரையாடல் அமைந்து வராது எழுதிக்கொள்ள வேண்டும்.

(ஈ)

- சிறுகதை அமைப்புப் பேணப்படவேண்டும்.
- வழங்கப்பட்ட குறிப்புகளுக்கமைவாகக் கற்பனை நயத்துடன் எழுதவேண்டும்.
- இயல்பானதும், கவர்ச்சியானதுமான கதையோட்டம் அமைந்துவர வேண்டும்.
- இயல்பான பாத்திரப் படைப்பு அமைய வேண்டும்.
- பொருத்தமானதும், கவர்ச்சியானதுமான மொழிநடை இடம்பெற வேண்டும்.
- கதாபாத்திரங்கள் உரையாடவேண்டும்.
- சமூகத்திற்கான விழுமியம் உரைக்கப்பட வேண்டும்.
- பொருத்தமான முடிவு இடம்பெற வேண்டும்.

| | | |
|---|---|---|
| **பொருளமைவும் அளவும்** | - | **12 புள்ளிகள்** |
| **கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும்** | - | **06 புள்ளிகள்** |
| **எழுத்து நட்பங்கள்** | - | **05 புள்ளிகள்** |
| **தலையங்கம்** | - | **02 புள்ளிகள்** |
| **மொத்தம்** | – | **25 புள்ளிகள்** |

*3.* சுருக்கத்தில் இடம் பெறவேண்டிய பிரதான கருத்துக்கள்

- ஒரு இனத்தின் பெருமையையும் சிறப்பையும் பண்டைய இலக்கியங்கள் வெளிப்படுத்தும்.
- தமிழ் மொழியின் பெருமையை இலக்கண இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.
- இவை பண்பாட்டு விழுமியங்களை அறியவும் புரியவும் உதவுவது.
- எமது சமுதாயம் வாழவேண்டிய முறையையும், பண்டைய காதலையும் வீரத்தையும் கூறுகின்றன.
- இந்நூல்களைக் கற்பதும் பேணிப் பாதுகாப்பதும் தமிழராய்ப் பிறந்த எமது கடமையாகும்.
- இதில் திணையளவு திருடப்பட்டாலும் அதற்குக் குரல் கொடுக்க முன்வரவேண்டும்.

| | |
|---|---|
| **விடயம்** | **– 06 புள்ளிகள்** |
| **சொல்லளவு** | **– 02 புள்ளிகள்** |
| **மொழி** | **– 02 புள்ளிகள்** |

**(6 + 2 + 2 = 10 புள்ளிகள்)**

*4.*

(அ) பண்பாட்டின் வரையறை பற்றிய குறிப்புக்கள்

(ஆ) பண்பு, பண்புடைமை, சால்பு, சாண்றாண்மை

(இ) சான்றோர், ஒழுக்கமுடையோர், ஒளியோர், மாசற்ற காட்சியுடையோர்

(ஈ) திருக்குறள்

(உ) நிலத்தைப் பண்படுத்துதல்.

**(02 x 05 = 10 புள்ளிகள்)**

*5.*

**துண்டுப்பிரசுரம்**

**அமைப்பு**

| | |
|---|---|
| கவர்ச்சிகரமான தலைப்பு | - 02 புள்ளிகள் |
| விளிப்பு | - 01 புள்ளிகள் |
| வெளியிடுபவர் பற்றிய விபரம் | - 02 புள்ளிகள் |
| | **05 புள்ளிகள்** |
| **உள்ளடக்கம்** | **- 07 புள்ளிகள்** |
| **மொழிநடை** | **- 03 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **- 15 புள்ளிகள்** |

- உள்ளடக்கம்
  - வாசிப்பு மாதச் செயற்பாடுகள் நடைபெறுவதைக் கூறுதல்.
  - வாசகர் வட்டம் உருவாக்கப்படுவதைப் பற்றிக் கூறல்.
  - வாசிப்பின் இன்றியமையாமை பற்றிக் கூறுதல்.
  - வாசகர் வட்டச் செயற்பாட்டு வளவாளர் பற்றிக் குறிப்பிடல்.
  - பங்குபற்றுநர் பற்றிய விபரங்களைக் கூறுதல்.

- மொழிநடை
  - கவர்ச்சியான மொழிநடை
  - வாசகர்களை விளித்து எழுதப்படல்.
  - சொற்செறிவு கொண்டதாக இருத்தல்.

**அல்லது**

**கடிதம்**

**அமைப்பு**

| | |
|---|---|
| முகவரி | - 01 புள்ளிகள் |
| உள்முகவரி | - 01 புள்ளிகள் |
| விளிப்பு | - 01 புள்ளிகள் |
| தலைப்பு | - 01 புள்ளிகள் |
| பதவி, ஒப்பம் | - 01 புள்ளிகள் |
| | **05 புள்ளிகள்** |
| **உள்ளடக்கம்** | **- 07 புள்ளிகள்** |
| **மொழிநடை** | **- 03 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **- 15 புள்ளிகள்** |

- உள்ளடக்கம்
    - செம்பருத்திக் கிராமத்தின் திண்மக் கழிவுகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தல்.
    - கிராம மக்களின் நிலைமையை விளக்குதல்.
    - கழிவகற்றற் செயற்பாடு முறையாக மேற்கொள்ளப்படாமை பற்றிக் குறிப்பிடல்.
    - உரிய காலத்தில் கழிவகற்றப்படாமை.
    - கழிவுகளை ஆங்காங்கு வீசப்பட்டுள்ளமையைக் குறிப்பிடல்.
    - கட்டாக்காலிகள் அதைச் சிதைத்தல் தொடர்பாகக் கூறுதல்.
    - சுற்றுச் சூழல் அழகற்றுப் போவதைச் சுட்டிக்காட்டல்.
    - தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயத்தைக் கூறுதல்.
    - கழிவுகளை உரிய காலத்தில் நாள்தோறும் அகற்றுவதன் மூலம் எமக்கு உதவுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்தல்.

- மொழிநடை
    - பொருத்தமான மொழிநடை
    - குறியீடுகள்
    - வழுக்கள் இன்றியிருத்தல்
    - சுட்டிப்பாக எழுதப்படல்

***

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 22 | T | III |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் - III**

**பகுதி III - விடைகள்**

*1.*

(i) (அ) சோழ மன்னன்

(ஆ) கொங்கு நாட்டவர்களுக்குப் போர்க்களத்தில் சுவர்க்கலோகத்தைப் பரிசளித்த வீரன் என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

(ii) (அ) மூத்தம்மா

(ஆ) முதற்பிள்ளை

(iii) (அ) குறவர்கள்

(ஆ) கிழங்கு, தினை, தேன்

(iv) (அ) சிவன் / ஈசன்

(ஆ) உருவக அணி
உள்ளமானது கமலமாக உருவகிக்கப்பட்டுள்ளது.

(v) (அ) கண்ணூறுபடல், இளைஞரை ஐயனார் காப்பார் எனும் நம்பிக்கை

(ஆ) சினந்தரிவி வெட்டுகிறார்கள் என்பதன் மூலம் அறியமுடிகிறது.

(vi) (அ) ஊன்றுகோல் பிடித்து நடத்தல், நடுக்கமடைதல்

(ஆ) இரங்கத்தக்கது

(vii) (அ) கணிப்பொறி / கம்பியூட்டர்

(ஆ) "தொலை" எனும் சிறுகதை

(viii) (அ) தான் தன்னிடமிருப்பதைப் பிறருக்குக் கொடுத்துதவுதல்

(ஆ) எள்ளளவு கூடப் பிறரிடம் இரந்து கேட்பது தகாதது

(ix) (அ) அருணந்தி சிவாச்சாரியார்

(ஆ) ஆடையைக் குறிக்கிறது

(x) (அ) அருச்சுணன்

(ஆ) உறுதி

**(02 x 10 = 20 புள்ளிகள்)**

*2.*

(i) (அ) குன்றினைப் போன்ற தோள்களையுடையவன், மனித குலத்தின் விளக்காக விளங்குபவன், பசுவைப் போல இயல்பான பாசங்கொண்டவன், காக்கை போலப் பகிர்ந்துண்பவன்.

(ஆ) உவமை : குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்
முத்துதிர நகை செய்யும்

உருவகம் : குணக்குன்று

(ii) (அ) அவமானம் என்பது பிறரால் ஏற்படுத்தப்படுவதாகும் என்கிறான் தருமன்
நமக்கு நாம் செய்வது அவமானமாகாது என்கிறான்.

(ஆ) நால்வகை உபாயங்களில் தண்டம் எனும் ஒறுத்தல்முறை இறுதியாகச் செய்யப்பட வேண்டியது. / போர் இறுதியாகச் செய்ய வேண்டிய உபாயம் என்பதையே தருமன் கூறியுள்ளான்.

(iii) (அ) உப்பின்றிச் சமைத்த உணவை அறுசுவையுடைய உணவாக எண்ணுதல்.
தோய்த்துலர்ந்த பழைய ஆடையைப் பட்டாடையாக என்ணிக்கொளல்.
பனையேலைப் பாயிற் படுத்துறங்குதல்.

(ஆ) மனங்கொண்டது மாளிகை - போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

(iv) (அ) காற்புள்ளி - கட்
முற்றுப்புள்ளி - மயங்கித்தெளிதல்
பத்தி - இருண்டுதெளிதல்

(ஆ) காட்சிப்படிமம்
ஒலி
படத்தொகுப்பு

(v) (அ) மேற்றிசை நாடுகளோடும், கீழ்த்திசை நாடுகளோடும், இந்தியாவின் வடபாகத்தோடும் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

(ஆ) பட்டு, முத்து, மிளகு முதலானவற்றை விரும்பினர்.

**(04 x 05 = 20 புள்ளிகள்)**

*3.*

(அ)

* அரசர்கள் தங்கிய முன்றிலையுடைய சக்கரவர்த்தியாகிய தசரதனின் மூத்த மனைவி
  "கோக்கள் வைகுமுற்றத்தான் முதற்றேவி..."

* மூவுலகங்களையும் படைத்தவனாகிய பிரமாவைத் தனது உந்திக் கமலத்தில் தோற்றுவித்தவனாகிய திருமாலின் அவதாரமாக விளங்குகின்ற இராமனை மகனாகப் பெற்றவள்.
  "மூன்றுலகுமீன்றானை முன்னீன்றானைப்"

* இராமன் அயோத்தியின் அரசனாவதால் தான் பெற்றுக்கொள்ள வேண்டிய அரசாட்சிச் செல்வத்தைத் தான் கைகேயியின் மகனாகப் பிறந்ததால் தன்பொருட்டு அதை இழந்து நிற்கும் பெருமைக்குரியவள்.
  "...பெறுஞ்செல்வம் யான் பிறந்த
  லாற்றுறந்த பெரியா ளென்றான்"

*(ஆ)*

* துன்பங்களையெல்லாம் தோற்றுவித்தவள்.
* பாவச் செயல்களையெல்லாம் வளர்த்தெடுக்கும் வளர்ப்புத்தாய்.
* எனது உயிர்ப் பாரங்குறைந்து தேயக் காரணமானவள்.
* உலகிற் காணப்படுகின்ற உடல்கள் யாவும் உயிரற்ற உடம்புகளாகக் காணப்படத் தான் மட்டும் துன்பம் இல்லாத முகத்தை உடையவள் என்று கூறி நிற்றல்.
* கொடியவளாகிய கைகேயியின் வயிற்றில் பிறக்க வேண்டிய நிலை தனக்கு ஏற்பட்டுவிட்டதே என நினைத்து வருந்தியமை.

**(07 + 08 = 15 புள்ளிகள்)**

***அல்லது***

*(அ)*

* நாண வேண்டியவற்றுக்கு நாணமடையாதிருத்தல்.
* வாழ்க்கைக்கு ஏதுவானவற்றைத் தேடிப் பெற்றுக்கொள்ளாமை.
* பிறர் மீது இரக்கம் காட்டாதிருத்தல்.
* எந்தவொரு பொருளையும் பேணிப் பாதுகாக்காமை.
* சிறந்த நூல்களைக் கற்றும் அதன் நூற்பயனை உணர்ந்தும் அதைப் பிறருக்கு எடுத்துக் கூறியும் வாழ்பவன் தான் அதற்கு அமைவாக ஒழுகமாட்டான்.
* ஏழு பிறப்பிலும் தான் நுழைந்து வருந்துவதற்குரிய நரகத் துன்பத்தை தன் ஒரு பிறவியில் செய்துகொள்ள வல்லவன் ஆவான்.
* செய்யும் வகையறியான் என்பதால் அவனது செயல் முழுமை பெறாமற் போவதோடு, இவன் குற்றவாளியாகி விலங்கிடப் பட நேரிடலாம்.

*(ஆ)*

* பேதை தன் கைப்பொருளாகச் செல்வத்தைப் பெற்றுக் கொள்வானாயின் அவன் நிலைமை பித்துப் பிடித்த ஒருவன் கள்ளுண்டு மயங்கியதைப் போலாகும் என்று உவமிக்கப்பட்டுள்ளது. இதில்

  உவமானம் : கள்ளுண்ட பைத்தியம் / பித்துப்பிடித்தவன்

  உவமேயம் : பேதை

  பொதுத்தன்மை : நிலை மறந்து செயற்படல்

* அறிஞர் சபையில் அறிவிலிகள் நுழைவதால் அரிய அச்சபை களங்கப்பட்டுவிடுகிறது. இதனால் தூய்மையற்றவற்றை மிதித்துவிட்டுக் கழுவாத கால்களைப் படுக்கையில் மிதித்த செயல்போல அருவருக்கத்தக்கதாக அது அமைந்துவிடும் என்று உவமித்துள்ளார் வள்ளுவர். இதன் உவமை விளக்கம் வருமாறு

  உவமானம் : தூய்மையற்றவற்றை மிதித்துவிட்டுக் கழுவாத காலைப் பள்ளியில் வைத்தல்

  உவமேயம் : அறிஞர் சபையில் நுழையும் பேதையர்

  பொதுத்தன்மை : அருவருக்கத்தக்க தகாத செயல்

**(09 + 06 = 15 புள்ளிகள்)**

4.

(அ)

- ♦ பறம்பு மலையைப் பிரித்து செல்வதால் அங்கவை அடைந்த துயர்
    - மலையின் மடிமீது மகிழ்வாக வாழ்ந்ததை எண்ணித் தாலாட்டினைப் பாடுவதன் மூலம் பிரிவுத் துயரை வெளிப்படுத்தல்.

      "காற்றெல்லாம் தேனிழைக்க
      மலைமடியிற் கண் வளர்த்தோம்"
    - தந்தையில்லைத் தந்தையின் தேரில்லைப் பறம்பு மலையை, பறம்பு மலையில் பால் வார்க்கும் நிலவை எப்படி எடுத்துச் செல்வது என வருந்துதல்.
    - இப்போ பகற்பொழுதுகளில் ஈத்திலைக் குப்பை மேட்டில் ஏறி நின்று உமணர்கள் ஓட்டுகிற உப்பு வண்டியை எண்ணிக் கொண்டிருக்கிறோமே என்று கூறி வருந்துதல்.
    - முற்றுகையின் போது பகைவர்களின் குதிரைகளை மலை முகட்டில் இருந்துகொண்டு விளையாட்டாக எண்ணிய தமக்கு இம்மலையைப் பிரியும் நிலை வந்ததே என எண்ணி வருத்தமடைதல்.

- ♦ பறம்பைப் பிரிவதால் சங்கவை அடைந்த துயரம்.
    - மரப்பாச்சிகளையும், குறிச்சி மலர் மாலையையும் கொண்டுவந்து காட்டி இது நினைவில்லையா நம் மலைக்குறத்திகள் நமக்குத் தொடுத்துத் தந்த குறிஞ்சி மலர்களின் மாலை. பூ வாடிடிச்சு ஆனா மணம் போகலை என்று கூறிப் பறம்பு மலை மக்களின் அன்பை விட்டுப்பிரியா மனநிலையை வெளிப்படுத்தியமை.
    - பறம்பு மலை மக்களின் அன்பை எப்படி விட்டுச்செல்வது? குறவர்கள், கானவர்கள், எயினர்கள் தந்தையின் பிரிவில் விதிர்த்துப் போய்விட்டார்கள் எனக் கூறி வருந்துதல்.
    - பாரியும் பறம்பும் வீழாதென்று எண்ணியிருந்தோமே அந்த எண்ணங்கள் பொய்த்துப் பறம்பைப் பிரியும் நிலை தோன்றியதே என வருத்தம் கொள்ளுதல்.
    - "வரகும் எள்ளும் முளைத்து முதிர்ந்து கிடக்கும் இப் புன்செய்களை விட்டுட்டுப் போக வேண்டியதுதான், நிலத்திற் புதைக்கப்பட்டு வெளியே எடுத்த கள்ளை ஒவ்வொரு குடிசையாய்ப் பகிர்வார்களே கள் மணக்கும் இக்குடிசைகளை விட்டுட்டுப் போக வேண்டியதுதான்" எனக் கூறித் துயரத்தை வெளிப்படுத்தியமை.

- ♦ கபிலர் அடைந்த துயரம்
    - இப்போ இந்த மலையைப் பிரிவது மலையை விடக் கூடுதலாகக் கனக்கிறதே எனக் கூறியமை.
    - புலாலிலும் மதுவிலும் களித்திருந்த நட்பு நம்முடையது என்று பாரியுடன் நட்புக் கொண்டதை எண்ணி வருந்தியமை.
    - அருவியில் முகங்காட்டும் உன் அழகிய காட்சிகள் நீர்வாரும் கண்களின் ஈரத்தில் நிற்கும் பறம்பு மலையே நீ வாழ்க. எனக் குறிப்பட்டு நின்றமை.
    - இனிய சுனை நீரில் ஒரு முடக்குக் குடியுங்கள் எனக் கூறுதல்.
    - முடிந்த மட்டுக்கும் இம் மலைப் பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள் எனக் கூறி நின்றமை.

(ஆ)

- போருக்கு முன்னர் பறம்பு தேசம் இருந்த நிலையைத் தாலாட்டுப் பாடலடிகள் விளங்குகின்ற போது அரளிப் பூத்தண்டினால் அத்தை அடித்து நிற்க மாமன் மல்லிகைச் செண்டினால் அடித்து அன்பை வெளிப்படுத்த நேற்று வரைக்கும் அசைந்து கொண்டிருந்த தொட்டிலில் தாலாட்டை மட்டும் கேட்டோம். மலைக் காற்றுத் தேனைச் சிந்தி நிற்க மலைத் தாயின் மடிமீது தூங்கினோம். எனக் கூறி நிற்கின்றன.

  இதனைப் பின்வரும் தாலாட்டுப் பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

  அரளிப் பூந்தண்டாலே
  அத்தை அடிச்ச கதை
  மல்லிகைப்பூச் செண்டாலே
  மாமன் அடிச்ச கதை
  நேற்றசைந்த தொட்டிலிலே
  நெஞ்சுருகக் கேட்டிருந்தோம்
  காற்றெல்லாம் தேனிழைக்க
  மலைமடியிற் கண்வளர்ந்தோம்.

- போருக்குப் பின்னரான பறம்பு தேசத்தின் நிலை பற்றித் தாலாட்டுப் பாடல் கூறும் போது

  மூவேந்தர்களின் பகைத்தீயின் நாக்குகள் பறம்பு தேசத்தைச் சுவைத்துக் கொண்டிருக்கிறது. தொட்டில் வரை செங்குருதிகள் சிதறுண்டன என்று பறம்பு தேசத்தின் பரிபூரண அழிவைக் காட்டி நிற்கின்றன.

  சான்றாகக் பின்வரும் தாலாட்டுப் பாடலடிகளைச் சுட்டலாம்.

  அரளிப்பூத் தண்டெடுக்கப்
  போன அத்தை திரும்பலியே
  மல்லிகைப்பூச் செண்டுகட்டப்
  போன மாமன் மீளலையே
  தாலாட்டில் அசைந்திருந்த
  தொட்டில்வரை ரத்தவெள்ளம்
  பால் வார்த்த நிலாமுகத்தில்
  பற்றிவிட்ட தீப்பந்தம்
  ஏலம் பூ வாய் பொசுங்க
  எரியுறது தீக்கொழுந்து
  காலப் புனல் கனக்கும்
  கண்ணீரையும் சுமந்து.

**(09 + 06 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

(அ)

* மங்கைக்கு ஏற்ற மணவாளன் வேண்டும்.
* தகுதியில்லாதவருக்குப் பெண்ணை மணம் முடித்துக் கொடுக்கப்படாது.
* கல்வி கற்றவருக்கே பெண் கொடுக்க வேண்டும்.
* பெண்ணினது பெருமையை அறியாதவருக்குப் பெண் கொடுப்பது வாழ்நாட் துன்பமாக அமையும்.
* கொடிய புலி வாயில் மானைக் கொடுப்பது போல பெண்ணை வலிந்து கொடுக்கப்படாது.
* தான் விரும்பிய ஆடவனை மணப்பதால் பெண் பெறும் மகிழ்ச்சி சிறந்தது.
* பொன்னில்லா இன்பம் பெண்ணிற்குச் சிறந்தது.
* பெண்ணை இழிவாகப் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
* பெண்கள் கல்வி பெறுவதற்குக் கட்டாயம் அனுமதிக்க வேண்டும்.
* பெண்ணின் விருப்பத்தோடு அவளது திருமணம் நிறைவேற்றப்பட வேண்டும்.
* பெண்ணை வீட்டிற் பூட்டி வைக்காது சுதந்திரம் வழங்க வேண்டும்.

(ஆ)

* உன்னைக் காதலித்தவன் நலிவடைந்தான்.
* உன் நினைவுகளில் மெலிந்து போனான்.
* தாங்காத துயரங்காரணமாக இவ்வுலகில் தனதுயிர் தங்காது எனல்.
* உனது பாதங்களே தனக்கு அடைக்கலம் பொருந்திய இடமாகும் என்றும் கூறினான்.
* பெண்ணே அவன் மீது இரக்கம் காட்டுவதே பொருத்தமாகும்.

எனத் தனது தகுதிகளை முன்னிறுத்தினான் தலைவன்.

**(10 + 05 = 15 புள்ளிகள்)**

5.

(அ)

* பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவமாகக் காட்சியளிப்பவன்.
* இளமைத் தோற்றத்தில் பொலிந்து காணப்படுபவன்.
* அழகிய வதனத்தையுடையவன்.
* செந்நிறம் பொருந்திய உதடுகளை உடையவன்.
* எவரையும் வசீகரிக்கும் வனப்புடையவன்.

(ஆ)

* பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவமாக விளங்குகிறான் எனல்.
* இடது கைப் பெருவிரலை ஊன்றிக் கைநாட்டு இட்டபோது அவன் சிரித்து நின்றதைச் செத்தசிரிப்பு எனல்.
* தனது இதயம் கழன்று ஒப்பத்தின் மீது வீழ்ந்து கத்தியது எனவும் பின்னர் பற்றியெரிந்து கருகியது எனவும் கூறியமை.
* எழுத்தறிவின்மை காரணமாக அவன் தனது காதலுணர்வை எவ்வாறு ஒருத்தியிடம் தெரிவிக்கப் போகிறான்.
* காகத்தைப் போல கரைந்து தன் காதல் உணர்வைக் காதலியிடம் தெரிவிக்கப் போகிறானா.
* அவன் இன்று அலுவலுக்கு வந்திருக்கப்படாது. எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்ற தினம் இன்று என வருத்துதல்.
* எழுதத் தெரியாத மனித நதி வரும் நாளில் சீறி ஒலியெழுப்பியோடாது சிறுதுளியாய் உறைந்து விடப்போகிறதே என அவனது எதிர்காலம் குறித்து இரங்கியமை.
* அவனது எழுத்தறிவற்ற நிலைக்குக் காரணமான பாடசாலையைச் சுட்டிக்காட்டுதல்.

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

**6.**

*(அ)*

* கலப்பைத் தொழில் பெருகவேண்டும்.
* செல்வம் பெருகவேண்டும்.
* மேதினியில் வாழ்பவர்கள் நல்வாழ்வு வாழவேண்டும்.
* நாடு தழைத்தோங்க வேண்டும்.
* எல்லோரும் மேண்மையுற்று வாழவேண்டும்.

*(ஆ)*

* ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருவதைப் போலவும்
* ஆற்றின் ஒழுகு நீரைத் தொடர்கின்ற பறவைகளைப் போன்றும்
* சேற்றில் தெளித்து வரும் வெள்ளம் போலவும்
* செங்கால் நாரைகள் மேய்ந்து வருதைப் போன்றும்
* சினந்தருவி வெட்டினார்கள் என வர்ணித்துக் கூறப்பட்டுள்ளமை.

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

**7.**

*(அ)*

* ஆடிக்குடத்தடையும்
  பாம்பு : ஆடியதுன் பின்னர் களைப்படைந்து குடத்தை அடையும்.
  எள்ளு : செக்கிலிட்டு ஆட்டப்பட்டதன் பின்னர் எண்ணெயாகக் குடத்தடையும்.

* ஆடும்போதேயிரையும்
  பாம்பு : ஆடுகின்றபோது சத்தமிடும்.
  எள்ளு : செக்கில் ஆட்டப்படும்போது இரைந்தவாறிருக்கும்.

* மூடித்திறக்கின் முகங்காட்டும்
  பாம்பு : பாம்பு நுழைந்துள்ள பானையின் மூடியைத் திறக்கின்றபோது தனது முகத்தை வெளியே காட்டும்.
  எள்ளு : எண்ணெய் ஊற்றப்பட்ட பானையின் மூடியைத் திறந்தால் பார்ப்பவரின் முகத்தைக் காட்டும்.

* ஓடி மண்டை பற்றிற் பரபரெனும்
  பாம்பு : விசம் உடலெங்கும் ஓடித் தலைக்கேறும் போது பரபரப்புடனான உணர்ச்சியைத் தோற்றுவிக்கும்.
  எள்ளு : தலையில் எண்ணெயை இடும்போது பரபரப்புடன் கூடிய குளிர்ச்சியை ஏற்படுத்தும்

* பாரிற் பிண்ணாக்குமுண்டாம்
  பாம்பு : பிளவுபட்ட நாக்குக் காணப்படும்.
  எள்ளு : பூமியில் உள்ளவர்க்குப் பிண்ணாக்கைத் தரும்.

(ஆ)

- சோழநாட்டு வளம்
  - சேறு நிறைந்த வயல்களை உடையது
  - பலாக் கனிகள் நிறைந்துள்ள நாடு
  - நீர் வளம் பொருந்தியது
  - இளநீரை மிகையாகக் கொண்டது
  - வயல் நிலத்தில் சங்குகள் காணப்படுவது

- தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரானது கூறப்படுகின்ற போது

  அவளது விழியாகிய வேலானது, தலைவனைப் பிரிந்த காரணத்தால் பிரிந்தாரை வருத்தும் இயல்புடைய பிறைச் சந்திரனுக்கும், கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதனுக்கும், ஈடுகொடுக்கமாட்டாது நலிவுற்றுக் கண்ணீரைப் பொழிகிறது என விளக்கப்பட்டுள்ளது.

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

✳✳✳